## களம் தேர்வு – 05

1. ‘இன்னறும்’ – பிரித்தெழுதுக?

(A) இனிமை + அறும் (B) இன் + அறும் (C) இனி + உறும் (D) இன்மை + அறும்

2. பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் எந்த நூல் தமிழுக்குக் கருவூலமாய் அமைந்துள்ளது.

(A) நூறாசிரியம் (B) மகபுகுவஞ்சி

(C) திருக்குறள் மெய்ப்பொருளுரை (D) பாவியக்கொத்து

3. கொழுந்து வகையின் அடிப்படையில் ‘குருத்து’ என்று அழைக்கப்படும் தாவர வகைகளில் சரியானவை எவை?

(A) சோளம், தென்னை, வாழை, பனை. (B) சோளம், கம்பு, தென்னை, பனை.

(C) சோளம், தென்னை, கரும்பு, பனை. (D) சோளம், கேழ்வரகு, கரும்பு, வாழை.

4. அடிவகையால் ‘தாள்’ என்றும், குலைவகையால் ‘கதிர்’ என்றும் அழைக்கப்படும் தாவரம் எது?

(A) நெல் (B) புல் (C) கேழ்வரகு (D) சோளம்

5. பிழையுற்ற தொடரைக் கண்டறிக.

(A) தொழிற்பெயர் திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றை காட்டாது.

(B) வினையாலணையும் பெயர் முக்காலத்திலும் வரும்.

(C) தொழிற்பெயர் தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும்.

(D) வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர் விகுதி பெற்ற தொழிற்பெயர் ஆகும்.

6. பொருத்துக.

| தாவர வகை | | மணிவகை | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) கம்பு | - | 1) விதை | (A) | 4 | 2 | 1 | 3 | 6 |
| b) புளி | - | 2) கொட்டை | (B) | 6 | 5 | 1 | 2 | 4 |
| c) கத்தரி | - | 3) முத்து | (C) | 4 | 2 | 6 | 3 | 1 |
| d) வேம்பு | - | 4) கூலம் | (D) | 6 | 5 | 1 | 3 | 4 |
| e) புல் | - | 5) காழ் | | | | | | |
| | - | 6) கூலம் | | | | | | |

7. பொருந்தாத இணைகள் எத்தனை?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. நுழாய் | - | இளம்பாக்கு | 2. கருக்கல் | - | இளநெல் |
| 3. குரல் | - | நெற்கதிர் | 4. கொம்மை | - | கேழ்வரகு உமி |
| 5. சொண்டு | - | பதராய் போன மிளகாய் | 6. கவ்வை | - | பலா பிஞ்சு |

(A) 1 இணை (B) 2 இணை (C) 3 இணை (D) 4 இணை

8. உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக பணியாற்றியவர் யார்?

(A) இரா.இளங்குமரனார் (B) இராசமாணிக்கனார்

(C) மொழி ஞாயிறு (D) முடியரசன்

9. கூற்று 1 : கண்ணன், படித்தான் என்பவை – தொடர் மொழி

கூற்று 2: கண்ணன் எழுதினான் என்பது – பொது மொழி

(A) 1, 2 சரி (B) 1 சரி / 2 தவறு (C) 1 தவறு / 2 சரி (D) 1, 2 தவறு

10. வாழைமரத்தின் உறுப்பின் தன்மை அடிப்படையில் தவறானதைத் தேர்க.

(A) ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன. (B) ஒரு தாற்றில் பல வாழைப்பழங்கள் உள்ளன

(C) ஒரு தாற்றில் பல சீப்புகள் உள்ளன. (D) ஒரு சீப்பில் பல தாறுகள் உள்ளன.

11. பிழையற்றத் தொடரைத் தேர்க.

(A) தேனிலே ஊரிய செந்தமிழின் சுவை ஓதி யுனர்ந்தின் புறுவோமே

(B) தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை ஓதி யுணர்ந்தின் புருவோமே

(C) தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை ஓதி யுணர்ந்தின் புறுவோமே

(D) தேனிலே ஊரிய செந்தமிழின் சுவை ஓதி யுணர்ந்தின் புறுவோமே

12. 'மருந்தே ஆயினும் விருந்தொடு உண்' – என்ற கருத்து எடுத்தாளப்பட்ட நூல் எது?

(A) மூதுரை (B) ஆத்திசூடி (C) நல்வழி (D) கொன்றை வேந்தன்

13. வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில்

ஆயுள் பெருக்கம் உண்டாம் – இக்குறளின் ஆசிரியர் யார்?

(A) காரியாசன் (B) திருவள்ளுவர் (C) ஔவையார் (D) கூடலூர் கிழார்

14. கீழ்க்கண்டவற்றில் பொருந்தாததைத் தேர்ந்தெடு.

மதுரை சென்றார், கரும்பு தின்றான், தேர்ப்பாகன், வெண்சங்கு ஊதினான்.

(A) கரும்பு தின்றான் (B) வெண்சங்கு ஊதினான்

(C) தேர்ப்பாகன் (D) மதுரை சென்றார்

15. மோர்ப்பானை – என்பதன் தொகை வகை அறிக.

(A) வேற்றுமைத் தொகை (B) உருபும் பயனும் உடன்தொக்க தொகை

(C) வினைத்தொகை (D) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

16. தவறான அமைப்பைக் கொண்ட இணைகள் எத்தனை?

1. தொடுதிரை - வினைத்தொகை

2. தண்ணீர்த்தொட்டி - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

3. வெண்டைக்காய் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை

4. மோர் கொடுக்கவும் - இரண்டாம் வேற்றுமைத் தொகை

5. மோர்க் குழம்பு - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

(A) 1 இணை (B) 2 இணை (C) 3 இணை (D) எதுவுமில்லை

17. கூற்று : கரும்பு தின்றான் என்பதில் 'ஐ' என்ற வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது.

காரணம் : இவ்வாறு வேற்றுமை, வினை, உவமை, உம்மை, பண்பு முதலியவற்றின் உருபுகள் மறைந்து வருவது தொகைநிலைத் தொடர் எனப்படும்.

(A) கூற்று – சரி ; காரணம் – சரி
(B) கூற்று – சரி ; காரணம் – தவறு
(C) கூற்று – தவறு ; காரணம் – சரி
(D) கூற்று – தவறு ; காரணம் – தவறு

18. பொருத்தமானதைத் தேர்வு செய்க (செறு)

(A) செய், வயல், சண்டை.
(B) வயல், குளம், கோபம்.
(C) வயல், பகை, குளம்.
(D) வயல், கோபம், சண்டை.

19. அரிய மலர் – இதன் பெயரெச்ச வகையைக் காண்க.

(A) தெரிநிலைப் பெயரெச்சம்.
(B) குறிப்புப் பெயரெச்சம்.
(C) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.
(D) எதிர்மறைப் பெயரெச்சம்.

20. பிழையற்ற தொடரைக் கண்டறிக.

(A) கரடிகள் மறத்தின் மீதேறி பூவைப் பறித்து உண்ணும்.

(B) கொழுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது.

(C) புவி சிலிர்த்து, மண்ணிலிருந்து சின்னஞ்சிறு மொட்டு முகிழ்ந்தது.

(D) பூக்கள் நறுமணத்துடன் வறவேற்றது.

21. இட்டதோர் தாமரைப்பூ இதழ்விரித்திருத்தல் போலே

வட்டமாய்ப் புறாக்கள் கூடி இரையுண்ணும் – இக்கவிதைக்குச் சொந்தமானவர் யார்?

(A) பாரதிதாசன் (B) கண்ணதாசன் (C) தமிழ்ஒளி (D) தாராபாரதி

22. இறங்கினார் முகமது – எவ்வகைத் தொடர்.

(A) எழுவாய்த் தொடர்
(B) வினைமுற்றுத் தொடர்
(C) வேற்றுமைத் தொடர்
(D) விளித்தொடர்

23. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி'என்னும் அடியில் பாக்கம் என்பது எதைக் குறிக்கும்.

(A) புத்தூர் (B) மூதூர் (C) பேரூர் (D) சிற்றூர்

24. பொருத்துக.

a) இறடி - 1) வெந்தது
b) பொம்மல் - 2) கூத்தர்
c) கடும்பு - 3) தினை
d) வயிரியம் - 4) சோறு
e) வேவை - 5) சுற்றம்

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 5 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 5 | 1 | 2 |
| (C) | 3 | 5 | 2 | 4 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 | 5 |

25. பழமொழியை நிறைவு செய்க.

விருந்தும் மருந்தும் ------ நாள்.

(A) ஒரு (B) இரண்டு (C) மூன்று (D) நான்கு

26. பிழையற்ற தொடரைக் கண்டறிக.

(A) ஊண் நிறைந்த ஊணை விருந்தினருக்கு அளித்தார்.

(B) ஊன் நிறைந்த ஊனை விருந்தினருக்கு அளித்தார்.

(C) ஊன் நிறைந்த ஊணை விருந்தினருக்கு அளித்தார்.

(D) ஊண் நிறைந்த ஊனை விருந்தினருக்கு அளித்தார்.

27. பொருளறிக.

மடு - மாடு

(A) இடம் - எருது (B) குட்டை - சுனை

(C) பொன் - பொய்கை (D) பள்ளம் - பக்கம்

28. பல நூல்களைக் கற்றும் அறிவில்லாதவராக கருதப்படுபவர் யார்?

(A) ஒழுக்கம் தவறுபவர் (B) நடுநிலைமை இல்லாதவர்

(C) உலகத்தோடு பொருந்தாதவர் (D) தவவலிமை இல்லாதவர்

29. பிழையற்ற குறளைக் கண்டறிக.

(A) அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமரா கொளல்.

(B) அரியவற்றுள் எல்லாம் அரிதேப் பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

(C) அரியவற்றுள் எல்லா அரிதே பெரியாரைப்
பேணித் தமரா கொளல்.

(D) அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

30. வேர்ச்சொல் காண்க – ‘கிளர்ந்த’

(A) கிள் (B) கிளர் (C) கிளர்ந்து (D) எதுவுமில்லை

31. சொற்பொருள் அடிப்படையில் தவறான இணைகள் எத்தனை என்பதைக் காண்க.

1. பீடு – சிறப்பு
2. ஈண்டி – செறிந்து திரண்டு
3. தண்பெயல் – குளிர்ந்த மழை
4. மன்னிய – நிலைபெற்ற
5. முகிழ்ந்த – தோன்றிய
6. சுரும்புகள் – வண்டுகள்

(A) 1 இணை (B) 2 இணை (C) 3 இணை (D) எதுவுமில்லை

32. படர்க்கை வினைமுற்றைத் தேர்க.

(A) வந்தோம் (B) வந்தாய் (C) பறந்தன (D) சென்றீர்

33. கூற்று : ‘என் அம்மை வந்தாள்’ என்று மாட்டைப் பார்த்துக் கூறுவது திணைவழுவமைதி ஆகும்.

காரணம் : இலக்கணமுறைபடி பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்.

(A) கூற்று – சரி / காரணம் – சரி (B) கூற்று – சரி / காரணம் – தவறு

(C) கூற்று – தவறு / காரணம் – தவறு (D) கூற்று – தவறு / காரணம் சரி

34. வழுவமைதி வகையைக் காண்க.

சிறிய வயதில் இந்த மரத்தில் தான் ஊஞ்சல் கட்டி விளையாடுவோம்.

(A) திணை வழுவமைதி (B) பால் வழுவமைதி

(C) கால வழுவமைதி (D) இட வழுவமைதி

35. வழாநிலையை வழுவமைதியாக மாற்றுக. “இதோ முடித்து விடுவேன்”

(A) இதோ முடித்துவிடுவேன் (B) இதோ முடித்துவிடுகிறேன்

(C) இதோ முடித்துவிட்டேன் (D) எதுவுமில்லை

36. சந்திப்பிழையற்ற தொடர் எது?

(A) காகத்திற்குக் காது உண்டா? அதற்குக் காது கேட்குமா?

(B) காகத்திற்குக் காது உண்டா? அதற்குக் காதுக் கேட்குமா?

(C) காகத்திற்குக் காது உண்டா? அதற்கு காதுக் கேட்குமா?

(D) காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா?

37. ‘மிரியல்’ என்ற சொல்லின் சரியான பொருளறிக.

(A) சணல் (B) புலி (C) நாக்கு (D) மிளகு

38. சரியான இணையைக் காண்க.

(A) தாள் – நாக்கு (B) உவா – சூரியன்

(C) கங்குல் – நெருப்பு (D) கனலி – பன்றி

39. 'செவ்வை' என்பதன் பொருளில் பொருந்தாததைத் தேர்க.

(A) அழகு (B) ஒழுங்கு (C) மிகுதி (D) நாக்கு

40. பொருத்துக.

a) சுவல் - 1) மயக்கம்

b) அவல் - 2) நஞ்சு

c) அழல் - 3) குளம்

d) மன்றல் - 4) மேடு

e) மருள் - 5) திருமணம்

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 | 5 |
| (B) | 3 | 4 | 1 | 5 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 5 | 1 |
| (D) | 3 | 4 | 2 | 5 | 1 |

41. தமிழின் முதல் அகராதியான சதுரகராதி நூலை படைத்தவர் யார்?

(A) ஜி.யு.போப் (B) கான்சுடான்சு ஜோசப் பெசுகி

(C) காயிதே மில்லத் (D) சந்தாசாகிப்

42. வீரமாமுனிவரால் தேம்பாவணி காப்பியம் எந்த நூற்றாண்டில் படைக்கப்பட்டது?

(A) 13ம் நூற்றாண்டு (B) 16 ம் நூற்றாண்டு (C) 17 ம் நூற்றாண்டு (D) 18 ம் நூற்றாண்டு

43. கூற்று 1: தேம்பாவணி என்பது "தேம்பா+அணி" எனப் பிரித்து வாடாத மாலை என்று பொருள் கொள்ளப்படுகின்றது.

கூற்று 2:தேம்பாவணி என்பது "தேன்+பா+அணி" எனப் பிரித்து தேன் போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது.

(A) 1 மட்டும் சரி (B) 2 மட்டும் சரி (C) 1, 2 சரி (D) 1, 2 தவறு

44. தேம்பாவணி நூலின் பாட்டுடைத்தலைவன்.

(A) சூசையப்பர் (B) கோலியாத்து (C) தாவீது (D) இயேசு நாதர்

45. தேம்பாவணியின் படலங்களின் எண்ணிக்கை.

(A) 33 (B) 35 (C) 36 (D) 39

46. 'இஸ்மத் சன்னியாசி' என்னும் பட்டம் யாரால் யாருக்கு வழங்கப்பட்டது?

(A) சந்தாசாகிப்பால் குணங்குடி மஸ்தானுக்கு (B) சரபோஜியால் வேதநாயகருக்கு

(C) சரபோஜியால் வீரமாமுனிவருக்கு (D) சந்தாசாகிப்பால் வீரமாமுனிவருக்கு

47. 'இஸ்மத் சன்னியாசி' என்னும் -------- சொல்லுக்கு தூய துறவி என்று பொருள்.

(A) அரபு (B) பாரசீக (C) உருது (D) இத்தாலி

48. கிறித்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம் என்றழைக்கப்படும் நூல் எது?

(A) இரட்சணிய யாத்திரிகம் (B) தேம்பாவணி

(C) வேதியர் ஒழுக்கம் (D) சதுரகராதி

49. பொருத்துக.

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) சேக்கை | - | 1) நிலம் | (A) | 4 | 3 | 5 | 2 | 1 |
| b) புழை | - | 2) படுக்கை | (B) | 2 | 4 | 3 | 1 | 5 |
| c) அசும்பு | - | 3) மலர்கள் | (C) | 2 | 5 | 1 | 4 | 3 |
| d) படலை | - | 4) மாலை | (D) | 4 | 1 | 5 | 2 | 3 |
| e) துணர் | - | 5) துளை | | | | | | |

50. காலக்கணிதம் கவிதையில் இடம் பெற்ற தொடர் -----

(A) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது (B) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

(C) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் (D) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

51. கிறித்துவின் வருகையை அறிவித்த முன்னோடி

(A) அருளப்பன் (B) யோவான் (C) சந்தாசாகிப் (D) யூதாஸ்

52. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) Belief | - | 1) மெய்யியலாளர் | (A) | 3 | 1 | 4 | 2 |
| b) Philosopher | - | 2) மீட்டுருவாக்கம் | (B) | 2 | 1 | 3 | 4 |
| c) Renaissance | - | 3) நம்பிக்கை | (C) | 3 | 4 | 1 | 2 |
| d) Revivalism | - | 4) மறுமலர்ச்சி | (D) | 4 | 3 | 1 | 2 |

53. கண்ணதாசனின் சாகித்திய அகாடமி விருது பெற்ற நூல் எது?

(A) சேரமான் காதலி (B) ஒரு சிறு இசை

(C) ஆகாயத்துக்கு அடுத்த வீடு (D) சூடிய பூ சூடற்க

54. ‘மாற்றம் எனது மானிடத் தத்துவம்’ என்று பாடியவர்?

(A) புரட்சிக்கவி (B) கவிஞரேறு (C) புலவரேறு (D) கவியரசு

55. கலைச்சொல் அறிக “Patent”

(A) ஆவணம் (B) காப்புரிமை (C) பாசனம் (D) துணைத் தூதரகம்

56. பொருத்துக (ஊர் பெயர்களின் மரூவு பெயர்கள்)

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) அலங்காநல்லூர் | - | 1) சங்கை | (A) | 2 | 4 | 1 | 3 |
| b) ஆற்றூர் | - | 2) அலங்கை | (B) | 4 | 3 | 2 | 1 |
| c) உசிலம்பட்டி | - | 3) ஆத்தூர் | (C) | 3 | 4 | 2 | 1 |
| d) சங்கரன்கோவில் | - | 4) உசிலை | (D) | 2 | 3 | 4 | 1 |

57. "கருவை" என்ற ஊரின் இயற்பெயரைத் தேர்க.

(A) கரிவலம் வந்தநல்லூர் (B) கருந்தட்டைக்குடி

(C) கரூவூர் (D) காஞ்சிபுரம்

58. தவறானப் பொருத்தத்தைத் தேர்க.

(A) சைதாப்பேட்டை - சைதை (B) சேந்தமங்கம் - சேலம்

(C) தருமபுரி - தகடூர் (D) திருத்தணி - தணிகை

59. "காருகர்" என்ற சொல்லின் பொருள்.

(A) நெய் (B) நறுமணப் பொடி (C) நெய்பவர் (D) ஓவியர்

60. பொருத்துக

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) வெறுக்கை | - | 1) எண்ணெய் விற்போர் | | (A) | 3 | 4 | 5 | 2 |
| b) பாசவர் | - | 2) செல்வம் | | (B) | 2 | 4 | 1 | 5 |
| c) ஓசுநர் | - | 3) துணி | | (C) | 4 | 1 | 2 | 3 |
| d) நொடை | - | 4) வெற்றிலை விற்போர் | | (D) | 2 | 3 | 1 | 4 |
| | - | 5) விலை | | | | | | |

61. ஒருவருக்கு வறுமையைப் போன்று துன்பம் தருவதாக வள்ளுவர் கூறுவது

(A) கயமை (B) குடிப்பெருமையை தாழச் செய்வது

(C) வறுமை (D) மனதில் துணிவின்மை

62. கலைச்சொல் அறிக "Terminology"

(A) கலைச்சொல் (B) அழகியல்

(C) கலைப்படைப்புகள் (D) தொன்மம்

63. தொடர்வகை அறிதல்

அழைப்புமணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தாள்.

(A) தனிசொற்றொடர் (B) கலவைச் சொற்றொடர்

(C) தொடர் சொற்றொடர் (D) செய்வினைத் தொடர்

64. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

மையல், மௌவல், மேடு, மெல்ல, மொட்டு, மோர்.

(A) மொட்டு, மோர், மௌவல், மெல்ல, மேடு, மையல்.

(B) மெல்ல, மொட்டு, மேடு, மோர், மையல், மௌவல்.

(C) மெல்ல, மேடு, மையல், மொட்டு, மோர், மௌவல்.

(D) மேடு, மோர், மெல்ல, மொட்டு, மௌவல், மையல்.

65. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர் - இத்தொடரின் செயப்பாட்டுவினைத் தொடர் எது?

(A) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்.

(B) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.

(C) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.

(D) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்.

66. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர் - இத்தொடருக்கான வினா எது?

(A) கரகாட்டம் என்றால் என்ன? (B) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?

(C) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை? (D) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

67. தவறான மொழி பெயர்ப்பைத் தேர்க.

(A) Exhibition - அகழ்வாராய்ச்சி (B) East Indian Railways -இருப்புப்பாதை

(C) Revolution - புரட்சி (D) Strike - தொழில் நிறுத்தம்

68. தவறான இணையைத் தேர்க.

(A) Telegraph - தொலைவரி (B) Telescope - தொலை அளவியல்

(C) Television - தொலைக்காட்சி (D) Telephone - தொலைபேசி

69. பொருத்துக.

a) கவரி - 1) உறவினர்
b) நுவன்ற - 2) சாமரை
c) தமர் - 3) சினம்
d) தார் - 4) சொல்லிய
e) முனிவு - 5) மாலை

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 5 | 2 |
| (B) | 2 | 4 | 3 | 1 | 5 |
| (C) | 2 | 4 | 1 | 5 | 3 |
| (D) | 5 | 4 | 3 | 2 | 1 |

70. "அருந்துணை" என்பதைப் பிரித்தால் -------

(A) அருமை + துணை (B) அரு + துணை

(C) அருந் + துனை (D) அருந்து + உணை

71. "ஓடினாள்" என்பதில் வேர்ச்சொல் அறிக.

(A) ஓடி (B) ஓடு (C) ஓடிய (D) ஆள்

72. பின்வருவனவற்றுள் பெயரெச்சத் தொடர் எது?

(A) அம்மா சொன்னார் (B) தந்த அரசர் (C) ஓடி வந்தாள் (D) துளிருடன் பார்த்தேன்

73. கலைச்சொல் அறிக "Thesis"

(A) சின்னம் (B) அறிவாளர் (C) குறியீட்டியல் (D) ஆய்வேடு

74. விடுபட்ட இடத்தை உரிய சொல்லால் நிரப்புக

தமிழகத்தில் மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர் ------- மாவட்டங்களில் கரகாட்டம் நிகழ்த்தப்படுகிறது.

(A) முதலிய (B) ஆகிய (C) வரை (D) ஆகையால்

75. பிரித்து எழுதுக "பாடாண்திணை"

(A) பாடாண் + திணை (B) பாடு+ஆண்+திணை

(C) பாடா+ஆண் +திணை (D) பாட்டு+ஆண் +திணை

76. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) Transcribe | - | 1) படியெடுத்தல் | (A) | 3 | 4 | 1 | 2 |
| b) Transfer | - | 2) மாறுதல் | (B) | 1 | 2 | 3 | 4 |
| c) Transform | - | 3) உருமாற்றுதல் | (C) | 2 | 3 | 1 | 4 |
| d) Transact | - | 4) செயல்படுத்துதல் | (D) | 4 | 3 | 2 | 1 |

77. 'ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்

அவனும் யானுமே அறிந்தவை; அறிக!' - என்ற கவிதைக்கு தொடர்புடையவர்?

(A) கண்ணதாசன் (B) பாரதிதாசன் (C) தமிழ்ஒளி (D) நாமக்கல் கவிஞர்

78. "கரையேறுதல்" என்ற மரபுத்தொடரின் பொருள் -------

(A) காலம் தாழ்த்துதல் (B) உயர்ச்சி அடைதல்

(C) துன்பத்திலிருந்து மீளுதல் (D) துன்பத்திலிருந்து காப்பாற்றுதல்

79. வேர்ச்சொல் தேர்க.

குமரன் வீட்டுக்குச் சென்றான்

(A) சென்ற (B) செல் (C) சென்று (D) செல்ல

80. வேர்ச்சொல் கண்டறிக "நைந்தான்"

(A) நஞ்சு (B) நஞ்சன் (C) நைந்து (D) நைந்த

81. தவறான இணையைக் கண்டறிக?

(A) இரிய - ஓட (B) இகல் - மாறுபாடு

(C) இடுக்கண் - துன்பம் (D) இறடி - திணை

82. "உல்கு" என்ற சொல்லின் பொருள் யாது?

(A) செல்வம் (B) வரி (C) உலகம் (D) உடைமை

83. "உரு" என்ற சொல்லிற்கு பொருந்தாத பொருளை கண்டறிக?

(A) அழகு (B) உருவம் (C) மிகுதி (D) வடிவம்

84. "ஊறு" என்ற சொல்லின் எதிர்ச்சொல் கண்டறிக?

(A) துன்பம் (B) ஊக்கமின்மை (C) இன்பம் (D) ஊக்கம்

85. தவறான இணையைக் கண்டறிக?

(A) உய்த்தல் - ஈடேறுதல் (B) உள்ளுவது - எண்ணுவது

(C) உய்ம்மின் - ஈடேறுங்கள் (D) உள்ளப்பூட்டு - அறிய விரும்புதல்

86. வாக்கியம் ஒன்று : - "ஊன்" என்ற சொல்லின் பொருள் "தசை" ஆகும்

வாக்கியம் இரண்டு : - "ஊண்" என்ற சொல்லின் பொருள் "மாமிசம்" ஆகும்

(A) வாக்கியம் ஒன்று மட்டும் சரி (B) வாக்கியம் இரண்டு மட்டும் சரி

(C) வாக்கியம் இரண்டும் சரி (D) வாக்கியம் இரண்டும் தவறு

87. "எள்ளுவர்" என்ற சொல்லின் எதிர்ச்சொல் கண்டறிக

(A) இகழ்வர் (B) புகழ்வார் (C) அடைவர் (D) எய்துவர்

88. சரியான இணையைக் கண்டறிக?

1. இளிவு - நிலைதாழ்தல் 2. இழிவு - அவமானம்

3. ஈரம் - இறக்கம் 4. உழுவை - மாடு

5. உலைதல் - தளர்தல்

(A) 1, 3, 5 சரி (B) 1, 2, 5 சரி (C) 2, 4, 5 சரி (D) 2, 3, 5 சரி

89. "உழப்பது" என்ற சொல்லின் பொருள் யாது?

(A) உழுவது (B) தேவர் (C) அனுபவிப்பது (D) உழைப்பது

90. "ஏதப்பாடு" என்ற சொல்லின் பொருள் யாது?

(A) ஏற்பாடு (B) குற்றம் (C) மாலை (D) ஒலித்தல்

91. "Chromoplast" என்ற ஆங்கில சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் காண்க

(A) பசுங்கணிகம் (B) வண்ணக்கணிகம் (C) வெளிர்கணிகம் (D) மத்திய கணிகம்

92. பொருத்துக

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) Leucoplast | - | 1) வண்ணக்கணிகம் | | (A) | 4 | 3 | 2 | 1 |
| b) Chloroplast | - | 2) கணிகங்கள் | | (B) | 4 | 2 | 3 | 1 |
| c) Chromoplast | - | 3) வெளிர்கணிகம் | | (C) | 3 | 4 | 2 | 1 |
| d) Plastids | - | 4) பசுங்கணிகம் | | (D) | 3 | 4 | 1 | 2 |

93. "Oyster" என்ற ஆங்கில சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் காண்க

(A) கிளிஞ்சல் (B) காளான் (C) நண்டு (D) இறால்

94. "Viscosity" என்ற ஆங்கில சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் காண்க

(A) ஆவியாதல் (B) பாகுத்தன்மை (C) குரல்வளை (D) முத்துசிப்பி

95. "Organelle" என்ற ஆங்கில சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் காண்க

(A) கரிம வேதியியல் (B) கனிம வேதியியல் (C) நுண் உறுப்பு (D) குட்டி ஈனுபவை

96. தவறான இணையைக் கண்டறிக

(A) Syrinx - குரல்வளை (B) Solenoid - மூலக்கூறுகள்

(C) Spicules - முட்கள் (D) Nematocyst - கொட்டும் செல்கள்

97. "Viviparous" என்ற ஆங்கில சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல்

(A) முட்டையிடுபவை (B) குட்டி ஈனுபவை

(C) முதுகெலும்புள்ளவை (D) முதுகெலும்பற்றவை

98. "Contraction" என்ற ஆங்கில சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல்

(A) கண்விழி (B) ஐரிஸ் (C) சுருங்குதல் (D) கருவிழி

99. சரியான இணையைக் கண்டறிக

1. Corals - பவளங்கள் 2.Insulator - காப்பான்கள்

3. Microscope - தொலைநோக்கி 4. Resistivity - மின்தடை

(A) 1, 3 சரி (B) 1, 2, 3 சரி (C) 1, 2, 4 சரி (D) 1, 2, 3, 4 சரி

100. "Dicotyledons" என்ற ஆங்கில சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல்

(A) ஒருவித்திலைத் தாவரங்கள் (B) இருவித்திலைத் தாவரங்கள்

(C) ஆஞ்சியோஸ்பெர்ம் (D) ஜிம்னோஸ்பெர்ம்